உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி சுக<br>Vol. 61 | திருவள்ளுவர் ஆண்டு 1996<br>September 1965 | பகுதி ச<br>No. 4 |
| --- | --- | --- |

## தமிழ் மொழி வளர்ச்சி

பண்டித.
இராமசுப்பிரமணிய நாவலர்
(மால்முருகனார்)
நாகர்கோவில்.

ளுளில் வசைக்கலையாகி விடும். அது போலவே மொழிக ளும் பொதுமக்கள் வழிச் செல்ல விடத் தக்கன அல்ல. பொதுமக்களைக் கற்பித்து அவர்களை மொழிவழி நிற்பச் செய்ய வேண்டுமேயன்றி அவர்வழி மொழியைச் செலச் செய்வது நெறிமை அன்று. சான்றோரை அடிக்கொண்டு ஒழுகின், உலகு முன்னேறும். பொதுமக்கள் அடிபட்டு ஒழுகின், உலகம் சீர்கெடும். ஒழுக்கம், நாகரிகம், கல்வி, கலை, தொழில், வழக்காறு முதலியன எல்லாம், பொதுமக் களை நோக்கித் தழுவத்தக்கன அல்ல; சான்றோரை நோக்கி மேற் கொள்ளத் தக்கவை. அன்றேல், களவு, கரவு, இழிவு, மடமை, மடிமை, இழுக்கம், என்பனவே உலகில் பரவத் தொடங்கும். அரசியலும் பொதுமக்கள் வழி ஒழுக வேண் டும் என்பது கொடுமைக்கும் பிளவுக்கும் அநீதிக்கும் அமைதியின்மைக்குந் தக்க இடம் வகுக்க முயல்வதாகும்.

MAHAMAHOPADHYAYA

எனவே, குடியரசினும் அக்குடிகளால் சான்றோர் எனக் கொள்ளப்படுபவரிடத்தே ஆட்சிநிலை பெற வேண்டும். பொதுமக்கள் தேர்வால் ஆட்சி பொதுமகன் கைப்படில், நாடு ஒருதலையாகச் சீர்அழியும். ஆதலால், குடியரசில் சில பொழுது ஆட்சிநிலைகுலையக்கூடும். அவ்வாறுகாவாறு சான்றோர் பேணவேண்டும். அதுபோல, ஒருமொழி பொது மக்கள் கைப்பட்டுச் சீரழியாவாறு சான்றோரே அதனைப் பேணுங்கடமை உடையவராவர்.

பொதுமக்கள் தமிழைச் சிதைத்தே வழங்குவர். அவர்க்குப் புலப்படும் நடையையே விரும்புவர்; மேல் நிக ழுங்குற்றங்களையும் காலப்போக்கின் உண்மையையும் உண ராது பல்வகை வழுக்களையும் உவந்தேற்றுக் கொள்வர். தமிழைப் பொதுமக்கள் கைப்பட்டுச் சீரழியாவாறு போற் றுதல் தமிழ்ச் சான்றோர் கடமையாகும்.

தமிழை உலகப் பேச்சளவில் கீழ்நிலைக்குக் கொண்டு வரினும், திருக்குறள் முதலிய சங்க நூல்களையும் கம்பராமா யணம் சீவகசிந்தாமணி முதலிய காவியங்களையும் படித்துப் பயன் பெறுவதற்கு உயர்ந்த கல்வி பயிலவேண்டுமன்றோ? அக்கல்வியும் அதனால் வரும் பயனும் ஏன் பொதுமக்கள் அடையும்படி செய்தலாகாது? ஏன் அவர்களை உயர்தரக் கல்வியில் நின்றும் தீண்டப்படாதார் போல ஒதுக்கி விட வேண்டும்? தமிழினது தொன்னூற் கலைச் செல்வச்சாலை யில் ஏன்பொதுமக்கள் நுழைந்து நுகரக்கூடாது? அவற்றில் சிலர் மட்டும் புகுந்து, வாரியுண்டு, தாம் உண்ட எச்சிலை மட்டும் ஏன் பொதுமக்களுக்கு அளிக்க வேண்டும்? பொது மக்கள் ஏன் அம்மிச்சிலைச் சுவைக்க வேண்டும்? அவர்களும் ஏன் அச்செல்வத்தை வடிவழியாது நுகரக்கூடாது? பொதுமக்களுக்குக் கீழ்தரமான கல்வியை மட்டும் அளித்

து கீழ் நிலையில் இருக்கச் செய்வானேன்? திருவள்ளுவருள்ளத்தொடும் கம்பர் கருத்தொடும் ஏன் நம் பொதுமக்கள் நேர்முகமாய் அளவளாவக் கூடாது? பொது மக்கள் என்றும்பொதுமக்களாகவேஇருக்கவேண்டுமா?காவடிச்சிந்தும் நாடகப் பாட்டும் ஓரடிப் பதமும் பாரதிப் பாட்டும் பயக்கும் கல்விக்கு மேல் ஏன் பொது மக்கள் உயர்ந்து செல்லக் கூடாது? வள்ளுவர் வாய்மொழியில் என்ன வழு? கம்பரில் என்ன கறை? புறநானூற்றில் என்ன புரை? அகநானூற்றில் என்ன அகம்? இந்நூல்களைக் கல்லாதது என்? இன்னும் கூடாதவாறு பொதுமக்களைக் கல்வியில் கீழ்நிலைப் படுத்த முயலும் சீர் திருத்தக்காரர்களுடைய கருத்து என்னை? தமிழை உயர்ந்த நடையில் எழுதினால் என்னகேடு? பேசினால் என்னபாடு? தமிழை சிறப்பக் கற்றால் என்ன தவறு? ஆடவர்க்கொரு பாட்டு, பெண்டிர்க்கொரு பாட்டுப் பயில்வதேன்? பெண்டிர்க்கும் ஆடவர்க்கேற்ப உரிமை வேண்டும் என்று முறையிடுந் தமிழ்நாட்டில், கௌவையில் கல்வி ஔவைபிறந்த திருநாட்டில் திட்பமுற முத்தமிழுஞ் செவ்விபெறவுளத்தில் பெட்பினோடு கற்றறிந்த பேரிளம் பெண்கள் வாழ்ந்த வள நாட்டில் பெண்களுக்கென எளியதோர் தமிழ்நடை வழங்க வேண்டுமென்பது மானமோ அவமானமோ அறியேம். பேதையரைமேலும் பேதையராக்க முயலும் பெற்றிமை பெறும் பேதுறவேயாம். பெண்டிரும் உயர்ந்த தமிழ்க் கல்வி பெறவேண்டும். அவர்களும்காப்பியக்கவிஞராய்க் கனல வேண்டும். இருபாலரும் ஒருபாலராய்ச் செந்தமிழில் சீர்தகு புலமை திகழ்ந்து சிறக்க முயல வேண்டும். தமிழ்நாடு உண்மைத் தமிழ்நாடு ஆதல் வேண்டும்.

(தொடரும்)

# தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

—○—

## சேனவரையர் உரை

எளிமையாக்கம்:

**வித்துவான். நா. இராமையாபிள்ளை எம். ஏ.**

சூத்-14 வினாவும் செப்பே வினாவெதிர் வரினே.

இள்:-வினா எதிர்வரின் = வினவிய பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்து வினாவிற்கு மறுமொழியாய்வரின், வினாவும் செப்பே = வினாவும் செப்பாம்.

உதா:- 'சாத்தா உண்டியோ'? என்று வினவிய போது உண்ணேனோ? என்று வருவது வினாவாகிய செப்பாம்.

இதுவினா வாய்பாட்டான் வந்ததாயினும், 'உண்பல்' என்பது கருத்துப்பொருள் ஆகலின் செப்பு எனப்படும்.

'உண்டியோ'? என்று வினவியபோது 'உண்பல்' 'உண்ணேன்' என்று பதில் கூறாது தான் ஒன்றை வினவுவான் போலக் கூறப்பட்டிருப்பது காண்க. ஆகவே இது வழுவமைதி.

இங்குக் கூறப்பட்ட கருத்து செப்புவழுவமைதி எனின் 'செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே' என்ற அடுத்தசூத்திரத்தில் அடங்குமே என்றால் அற்றன்று. இச்சூத்திரம் வினாவும் செப்பு ஆவது கூறும். அடுத்த சூத்திரம் ஒன்றன் செப்பு மற்றொன்றுக்காகும் என்பது கூறும். எனவே இவ்விருகருத்துக்களும் தனித்தனி என்பதுணர்க.

சூத்: 15 செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இ-ள் செப்பே வழீஇயினும் =(செவ்வனிறையாகாது) செப்புவழுவி வரினும்; அத்பொருள் புணர்ந்த கிளவி யான= ஒருவாற்ருன் வினவிய பொருட்டு இயைபுபட்ட கிளவியாதற்கண்; வரைநிலையின்றே = கடியப்படாது.

உதா: சாத்தா! உண்டியோ? என்று வினவிய போது நீ உண்; வயிறுகுத்தும்; பசித்தேன்; பொழுதாயிற்று. என வரும் இவை செவ்வன் இறையல்லவேனும் வினவிய பொருளை ஒருவாற்ருன் அறிவுறுத்தும். ஆகவே இவை செப்பே யாம். இவை வழுவமைதியின்பாற்படும்.

வினு: இவை 'தெரிபுவேறு நிலையிலும் குறிப்பில் தோன்றலும்' என்னும் தொல்-சொல்-சூத்.157 இன்படி குறிப்பில் தோன்றலாய் அடங்குமே. ஆதலின் ஈண்டுக் கூறல் வேண்டாமே என்பது வினு

விடை: அவ்வாறு அடங்கும் எனினும் 'செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்' (சூத்.13) என்றதனுன் இவை வழுவாய் நின்றன; வழுவாய் நின்ற இவை ஒருவாற்ருன் விடையாகலின் இவற்றை அமைக்கல் வேண்டும் எனவே ஈண்டுக் கூறினர்.

சூத்: 16. செப்பினும் வினவினும் சினைமுதல் கிளவிக் கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே.

இள்: செப்பினும் வினவினும் = செப்பின்கண்ணும் வினவின் கண்ணும்; சினை, முதல் கிளவிக்கு = சினைக்கிள விக்கும் முதற்கிளவிக்கும்; உறழ் துணைப் பொருள் அப் பொருளாகும் = உறழ்பொருளும் துணைப்பொருளும் அவ்

வப் பொருளுக்கு அவ்வப் பொருளேயாம். எனவே சினையும் முதலும் தம்முள் மயங்கி வருதல் வழூ என்பதாம்.

உறழ்பொருள் = ஒப்புமை கூறாது மாறுபடக்கூறல்.
துணைப்பொருள் = ஒப்புமை கூறல்.

## செப்பு

சினை-இவள் கண்ணின் இவள் கண் பெரிய-உறழ்பொருள்
முதல்-நும் அரசனின் எம்மரசன் முறைசெய்யும்- ,,
சினை-இவள் கண்ணெக்கும் இவள்கண்-துணைப்பொருள்
முதல்-எம் அரசனையொக்கும் நும் அரசன்- ,,

## வினா

சினை-இவள்கண்ணின் இவள் கண் பெரியவோ-
உறழ்பொருள்
முதல்-எம் அரசனின் உம் அரசன் முறைசெய்யுமோ- ,,
சினை-இவள் கண்ணெக்குமோ இவள்கண்?-துணைப்பொருள்
முதல்-எம்மரசனை ஒக்குமோ நும்அரசன்- ,,

'அவன் கோலினும் தண்ணிய தடமென்தோளே'
'துளிதலைத் தலைஇய தளிரன்னோளே'-

என்பனசெய்யுள் பற்றிவரும் உவமவழு ஆகலின் ஈண்டைக் கெய்தா. அணியியலுள்பெறப்படும். மயங்கிவந்தனவாகா.

இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ-எனவழக்கிலும் மயங்கிவரும் எனின்-உண்மையுணர்தற்கு வினவியதன்றி ஐயவுவமை வாய்பாட்டால் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவையெல்லாம் 'உரை' என்னும் செய்யுளாம் என்க.

இந்நங்கை கையின் இந்நங்கை கண் நல்ல-என்னும்

தொடக்கத்தன மயக்கமின்மையின் இலக்கண வழக்காம் எனின்—அற்றன்று. ஒத்தபண்பு பற்றியன்றே பொருவுவது கண்ணொடு கைக்கு ஒத்தபண்பில்லையே. ஆகவே பொருவுதல் எங்கே! ஒத்த பண்புபற்றிய பொருவுதற்கண்ணதே இவ்வாராய்ச்சி என்க.

"செப்பினும் வினவினும்" என்று சூத்திரத்திற் கூறியதால் செப்புவழா நிலையும் வினவழா நிலையும் காக்கப் பட்டன. இவை 'வழா அல்ஓம்பல்' என்பதனால் அடங்குமாயினும் நுண்ணுணர்வுடையாரே உணர்ந்துகொள்ள முடியும். மற்றையார் உணர்ந்துகொள்ள முடியாது. அதனால் விரித்துக் கூறினர் என்க.

தன்னினம் முடித்தல்-என்பதனால் பொன்னும்துகிரும் முத்தும் மணியும் என எண்ணும்போதும் இனமாய பொருளே எண்ணப்படும் என்று கொள்க.

சூத்: 17: தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலையிலவே.

இள்: தகுதியும் = தகுதிபற்றியும்; வழக்கும் = வழக்குப்பற்றியும்; தழீஇயின வொழுகும் பகுதிக்கிளவி = தழுவி நடக்கும் இலக்கணத்திற் பக்கச்சொல்; வரை நிலையிலவே = கடியப்படா,

**தகுதியென்பது:** அப்பொருட் குரிய சொல்லால் சொல்லுதல் தகுதியில்லை யென்று அதை நீக்கித் தக்கதோர் வாய்பாட்டால் கூறுதலாகும். உதா:- செத்தாரைத் துஞ்சினார் என்றல்; சுடுகாட்டை நன்காடு என்றல்; ஓலையைத் திருமுகம் என்றல்; கெட்டதனைப் பெருகிற்றுஎன்னல் முதலாயின

**வழக்கு என்பது:** காரணம் இன்றி வழங்கற்பாடே

பற்றி வருவதாகும். உதா: வெள்யாடு; வெண்களமர்; கருங்களமர் முதலாயின. இவை பண்புகொள் பெயராயினும் பண்புகுறியாது சாதிப்பெயராய் வந்தன. வெண்களமர் = உழவர். வேளாளர் எனவும் சொல்வர்; கருங்களமர் = போர் வீரர்: புலையர் எனவும் சொல்வர். குடத்துள்ளும் பிறபாத்திரத்துள்ளும் இருந்த நீரைச் 'சிறிது' என்று சொல்லாது 'சில' என்று சொல்லுதலும் அடுப்பின் கீழ்ப் புடையடுப்பை (பக்க அடுப்பை) மீயடுப்பு என்று சொல்லுதலும் பிறவும் வழக்கின்பாற்படும்.

(1) உரையாசிரியர்: பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றல்; வண்ணக்கர் காணத்தை (பொற்காசை) நீலம் என்றல்—குழுவின் வந்த குறிநிலைவழக்கு—என்பர்.

மறுப்பு: குழுவின் வந்த குறிநிலை வழக்கு சான்றோர் வழக்கிலும் செய்யுளிலும் வாரா. (அவை பிறர் அறியாமல் மறைக்கப்படும். எனவே) அமைக்கப்படா.

(2) உரையாசிரியர்: கண்கழீஇ வருதும் கால்மேல் நீர்பெய்துவரும்-என்பன இடக்கரடக்கும் தகுதி.

மறுப்பு, இடக்கரடக்கு, 'அவையல்கிளவி மறைத்தனர் கிளத்தல் 'என்றும்' மறைக்கும் காலை மரீஇயது ஒரால் என்றும் எச்சவியலில் அமைக்கப்படும் இங்குவேண்டா.

(3) உரையாசிரியர்: மரூஉ முடிபு வழக்காறு

மறுப்பு: மரூஉமுடிபு எழுத்ததிகாரத்துக் கூறப்படும். இது சொல்லாராய்ச்சி. எனவே இங்கு பொருந்தாது.

இவ்வாறு சேனவரையர் உரையாசிரியர்மூன்றுகருத்தையும் மறுக்கிறார். மற்றொரு மூன்றுக்கு மறுப்பு மட்டும்

சேனவரையர் கூறுகிறார். மறுப்பிலிருந்து உரையாசிரியர் கூற்றை ஊகித்தறிந்து உரையாசிரியர் கருத்தும் மறுப்பும் தரப்படுகின்றன,

1. உரையாசிரியர்: காக்கையின் களம்பழம் கரிது என்னும்போது களம் பழம் கரிதாகி காக்கை வெளிதாயிற்று. இதுவழு. எனினும் வழக்காறு அமைக்கல் வேண்டும்.

மறுப்பு: கருமை முதலாயின ஒருநிகரவல்ல. காக்கையொடு சார்த்திக் களம் பழத்தை விதந்ததில் காக்கைக்கு வெண்மை வராது. காக்கையின் கரிது களம்பழம் என்றபோது கரிதாகிய காக்கை வெளிதாகவில்லை. காக்கையைக் காட்டிலும் களம்பழம் மிகக் கருமையுடையது என்பதேயாகும்.

2. உரையாசிரியர்: திருச்சியின் மேற்கு கோவை உதகையின் கிழக்கு கோவை. எனவே கோவை கிழக்காகவும் மேற்காகவும் வருகிறது. இதுவழு. எனினும் வழக்காறு.

மறுப்பு: கிழக்கு மேற்கு என்பன ஒன்றனொடுசார்த்தியே சொல்லப்படும். ஒற்றற்கு மேற்கு ஆகும் கிழக்கும் ஆகும். இது வழுவன்று.

3. உரையாசிரியர்: சிறுவெள்வாய்-முதலுக்கு இரு அடைகள் வந்துள்ளன. இது வழக்காறு.

மறுப்பு: சிறுவெள்வாய் என்பது இடுகுறிப்பெயர் ஒரு செடியின் பெயர். அடைமொழி பற்றி இங்கு ஆய்வில்லை.

இவை வழக்காறு என அமைக்கப்படாவாயினும்

உரையாசிரியர் பிறர்மதம் உணர்த்துவதற்குக் கூறினர்.

தத்தமக்குரிய வாய்ப்பாட்டானன்றி பிறவாய்பாட்டான் கூறுதல் வழுவாயினும், அமைக என மரபுவழுக்காத் தவாறு.

சூத்: 18: இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறல்ல; செய்யுளாறே.

இள்: இனச்சுட்டில்லா—இனப்பொருளை சுட்டுதலின்றி; பண்புகொள்பெயர்க்கொடை —பண்படுத்து வழங்கப்படும் பெயர்; வழக்காரல்ல —வழக்கு நெறியல்ல; செய்யுளாறே —செய்யுள் நெறியாகும்.

உதா: செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்—வெண்திங்களுள் வெயில் வேண்டினும்' எனவரும்.

பல பொருட்டு பொதுச்சொல்லாய் இருப்பது ஒரு பொருட்குச் சிறந்த பண்பான் விசேடிக்கப்பட வேண்டும். ஞாயிறு, திங்கள் என்பன பொதுச்சொல் இல்லை. எனினும் செஞ்ஞாயிறு என்றும் வெண்திங்கள் என்றும் விசேடிக்கப்பட்டிருப்பது செய்யுட்கண் அணியாய் நிற்கும். ஆதலின் அமைக்க என்றூர்.

தடை: பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன் என இல்லாதகுணமடுத்து, இனஞ்சுட்டாது வழக்கிலும் வருதலால், செய்யுளாறு என்றல் நிரம்பாது.

விடை: அவை இனம் சுட்டாமையின் வழுவாயின வல்ல; இல்குண மடுத்தலின் வழுவாயின. இனம் சுட்டல் என்பது இனத்தைச் சுட்டி அதனினின்றும் விசேடித்தல்.

விசேடித்தல் என்பது வெண்மை முதலாயின, அக்குணமில் லாத இனப்பொருளினீக்கி அக்குணமுடையதனை வரைந்து சுட்டுதல். சுட்டப்படுவதன்கண் அக்குணமில்லையானல் வரைந்து சுட்டல் எவ்வாறு முடியும். அதனுல் விசேடிக்கற் பாலது விசேடியாது நின்றதாகலின் ஈண்டைக்கு எய்தாது. 'வழக்கினுகிய உயர்சொற் கிளவி' (சூத். 27) என்ற விடத்தில் ஒன்றென முடித்தல் என்பதனுல் அமைக்கப்படும்.

குறுஞ்சூலி, குறுந்தடி என்பன சூலி, தடி எனப் பிரிந்து நில்லாமையின் பண்புகொள் பெயரில்லை. முழுதுமே பெயர். குறுந்தடி என்பது ஒருசெடியின் பெயர். குறுந் தட்டி என இக்காலத்தில் வழங்குவர். 'வடவேங்கடம் தென் குமரி' என்பது திசைஅடையடுத்து இனம் சுட்டாது பண் படாது வரும். முட்டாழை என்பது உறுப்பு அடையடுத்து இனம் சுட்டாது பண்படாது வரும். கோட்சுரு என்பது தொழில் அடையடுத்து இனம் சுட்டாது பண்படாது வரும். இவை ஒன்றென முடித்தல் என்பதனுல் செய்யுளாறு என அமைத்துக்கொள்ளப்படும்.

ஒன்றனது ஆற்றலால் ஒன்று பெறப்படுதலின், வழக்காறல்ல என்று மட்டுமாவது செய்யுளாறு என்று மட்டுமாவது கூற அமையுமெனின், உய்த்துணர்வது சொல் இல்லாதவழியெனமறுக்க.

பண்புகொள் பெயர் இனங்குறித்து வருதல் மரபு. அம்மரபு வழக்கின் கண் வழுவற்க; செய்யுட்கண் வழுவ மைக்க எனக்காத்தவாறு.

# உள்ளுறையும் இறைச்சியும்

பேராசிரியர்.
ஆ. சிவலிங்கனார்,
மயிலம்.

(சென்ற இதழ் 37ம் பக்கத் தொடர்ச்சி)

## உள்ளுறை-பொதுச்சொல்

உடனுறை முதலிய ஐந்து உள்ளுறைகளும் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களைப் பற்றுக்கோடாகக் கொண்டே வரும் என்பது பொதுவிதி.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியுணர்ந்தோரே

(தொல். பொ. ந. 47 இ. 50)

என்றார் ஆசிரியர். ஆதலின் உள்ளுறை என்ற மாத்திரத்தில் உள்ளுறையுவமம் எனக் கொள்ளாமல் ஐந்தையுமே கொள்ளல்வேண்டும். மேல் நூற்பாவானது உள்ளுறையுவமம் பற்றிக் கூறியதாகக் கொண்டு நச்சினார்க்கினியர்,

'இது முறையே உள்ளுறையுவமம் கூறுகின்றது' என்று சொல்லி,

''உள்ளுறை எனப்பட்ட வுவமம் தெய்வம் முதலிய
கருப் பொருள்களுள் தெய்வத்தை யொழித்து ஒழிந்த
கருப் பொருள்களே தனக்குத் தோன்று நிலனாகக்
கொண்டு புலப்படும் என்று கூறுப இலக்கணம்
அறிந்தோர் என்றவாறு''—

என உரையெழுதினார். இளம்பூரணர், ''இஃது உள்ளுறையா

மாறு உணர்த்துதல் நுதலிற்று'' என்றெழுதினர். இவர் எழுதியதே நன்றாம். இந்நூற்பாவின் மேல் நூற்பாவானது

உள்ளுறை யுவமம் ஏனை யுவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே
(தொ. பொ. ந. 46 இ. 49)

என்பதால். இதில் உள்ளுறையுவம் ஏனையுவமம் என உவமம் இரண்டு என்றார் அவற்றுள உள்ளுறையுவமமாவது யாது எனக் கூறுவதற்குமுன் உள்ளுவையாவது யாது எனக் கூறவேண்டுமாதலின் ''உள்ளுறை தெய்வம்'' என்ற நூற்பா, பொதுவில் இளம்பூரணர் கூறியபடி உள்ளுறை பற்றியதாகவே கொல்லல்வேண்டும். அடுத்து உள்ளுறையுவமமாவது யாது என்பதற்காக

உள்ளுறுத் திதனெ டொத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்.
(தொ. பொ. ந. 49 இ. 51)

என்ற நூற்பா எழுந்தது. இளம்பூரணர் இவ்வாறேதான் கருதினர் என்பதற்கு அவர், ''உடனுறை......ஐந்தே'' என்ற பொருளியல் நூற்பாவில்,

உள்ளுறையாவது பிறிதொரு பொருள் புலப்படுமாறு
நிற்பது ஒன்று. அதுகருப்பொருள்பற்றிவரும் என்பது
அகத்திணையியலுள் கூறப்பட்டது

என்று எழுதியதையும் சான்றாகக் கொள்ளலாம். அதனல் 'உள்ளுறை தெய்வம்' என்ற நூற்பாவிற்கு நச்சினர்க்கினியர், கூறியதினும் இளம்பூரணர் கூறியதே பொருந்தும்.

அன்றியும் உள்ளுறை என்ற சொல் உடனுறை முதலிய ஐந்தையும் குறிக்கும் பொதுச் சொல்லே என்பதற்கு நச்சினர்க்கினியர், ''உடனுறை.....ஐந்தே'' என்ற நூற்பாவில், ''இது...

உள்ளுறையினைத்து என்கின்றது'' என்று கூறிய வுரையும் சான்று பகரும்.

எனவே, உள்ளுறை என்பது கருப்பொருளைப் பற்றுக்கோடாகக்கொண்டு வரும் என்பதும் அது ஐந்தற்கும் பொதுச்சொல் என்பதும் பெறப்படும்.

(1) உடனுறை

உடனுறை என்பதை உடனுறை யுள்ளுறை என்றே இளம்பூரணர்கொண்டார். அதனால் அவர், ''உடனுறையாவது உடன் உறைவது ஒன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது'' என உரை கூறினார். ஆனால் நச்சினார்க்கினியர் அதனை இறைச்சியுள்ளுறை எனக்கொண்டார். அதனால் அவர் உடனுறை என்பதற்கு,

> ''நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும்கருப்
> பொருளாற் பிறிதொன்று பயப்ப மறைத்துக் கூறும்
> இறைச்சி''

என எழுதினார். அவர் உடனுறையுள்ளுறைக்கு இறைச்சியுள்ளுறை என வேறு பெயர் கொடுத்துக் கூறினார் உடனுறை எனினும் இறைச்சி எனினும் ஒக்கும் என்பது அவர் கருத்து.

இளம்பூரணர் இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்றே கொண்டு இறைச்சி பற்றி (கருப்பொருள் பற்றி) உள்ளுரை ஐந்தும் தோன்றும் என்றார்.

> இறைச்சி தானே உரிப்புறத் ததுவே
>
> (தொ. பொ. இ.225)

என்ற நூற்பாக்கு,'இறைச்சிப் பொருள் என்பது உரிப் பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள்' எனஉரையெழுதி, 'அஃதாவது கருப் பொருளாகி நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி

வருவது' என விளக்கமும் எழுதி,

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

(குறுந் 3)

என்றவழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவும் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க.' என உதாரணங் காட்டிக் குறிப்பிட்டதும் கொண்டு அவர் கருத்தையறியலாம்.

அடுத்துக் கருப்பொருளிலிருந்து தோன்றும் உள்ளுறைப் பொருளை இறைச்சியற் பிறக்கும் பொருள் என்னலாம் என்பது இளம்பூரணர் கொள்கை.

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே.

(தொ. பொ. இ.226)

என்ற நூற்பாவில், ''இது இறைச்சிப் பொருள் வயிற் பிறக்கும் பிறிதும் ஓர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று'' என்று கூறி, ''இறைச்சிப் பொருள்வயின்தோன்றும் பொருளும்உள; பொருள் திறத்தியலும் பக்கத்து ஆராய்வார்க்கு'' என உரையெழுதியதோ டமையாது,

''இறைச்சிப் பொருள் பிறிதும் ஓர் பொருள்
கொளக் கிடப்பனவும் கிடவாதனவும் என
இருவகைப்படும்''

எனவும் எழுதினர். எனவே இறைச்சி என்பது கருப்பொருளையே குறிக்கும் என்பது இளம்பூரணர் கருத்து என்னலாம். அதற்கேற்பவே இறைச்சியிற் பிறக்கும் பொருளுக்கு இவர் காட்டிய உதாரணம் உள்ளுறையுவமாகக்கொள்ளக்கூடிய பொருளமைந்த பாட

லாகவுள்ளது.

“ஒன்றே னல்லன் ஒன்றுவன் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய்ய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே (குறுந். 208)

என்பது வரைவெதிர் கொள்ளாது தமர்மறுத்த வழித்தலைமகனோடு ஒன்றுமாறு என்னெக் கவன்ற தோழிக்கு உடன் போதற்குறிப்பினளாய்த் தலைமகள் கூறியதாகலின், இதனுட் பொருகளிறென்றமையால் தலைமகள் தமர் தலைமகன் வரைவிற்குடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்டதென்பது தோன்றுகின்றது. ‘பொருகளிறுமிதித்த வேங்கை’ என்றதனற் பொருகின்ற இரண்டுகளிற்றினும் மிதிப்பது ஒன்ருதலின் வரைவுடன்படாதார் தலைமகனையவமதித்தவாறு காட்டிற்று. ‘வேங்கை நின்று கொய்ய மலரும்’ என்றதனல் முன்பு ஏறிப்பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள்பட்டது. இதனானே பண்டு நமக்கு அரியனாகிய தலைமகன் தன்னை அவமதிக்கவும் நமக்கு எளியனாகி யருள்செய்கின்றான் எனப் பொருள்கொளக் கிடந்தவாறு காண்க”

இவ்வாறு பொருள் எழுதினார் இளம்பூரணர். இப்பொருள் நச்சினார்க்கினியர் இறைச்சிக்குக் கூறிய வகையில்இல்லாமல் உள்ளுறையுவம வகையில் இருத்தலைக் காணலாம். எனவே இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்றே கொண்டார் இளம்பூரணர் என்னலாம். எனவே இறைச்சி (கருப்பொருள்) பற்றி ஐந்துஉள்ளுறையும் தோன்றும் என்னலாம்.

உடனுறை யுள்ளுறைக்கு உதாரணமாக இளம்பூரணர் காட்டிய “விளையாடாயமொடு” என்ற செய்யுளை நச்சினார்க்கினியர் நகையுள்ளுறைக்குக் காட்டியுள்ளார். அவர் உடனுறையை இறைச்சியுள்ளுறை என்று கொண்டுவிட்டதால் அச்செய்யுள் நகை

யுள்ளுறைக்குப் பொருந்துவதேயாம். 'உடனுறை' என்ற சொல்லுக்கு 'தன்னொடு உடன் உறையும் கருப்பொருள்கள்' என்ற கருத்தில் இருவரும் பொருள்கொண்டனர் என்றாலும் இளம்பூரணர், 'தன்னோடு உடன் உறைதலாவது தன்னுடனே இருப்பது—அதாவது தன்னுடனே கருப்பொருளும் பழகியிருப்பது எனப்பொருள் கொண்டார். நச்சினார்க்கினியரோ, தன் உடன் என்பதன்றித் தன்னாட்டில் தன் ஊரில் உறைவதையும் தன்னுடன்உறைவதாகக் கொண்டார்.

உடனுறையை இரண்டாகக்கொண்டார் நச்சினார்க்கினியர் ஒன்று இறைச்சி என்பது. இரண்டாவது இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பது இவற்றுக்கு உதாரணங்கள் முன்னர்க் காட்டப் பட்டன.

இனி உடனுறை பற்றி நச்சினார்க்கினியர்கொண்டகருத்தே சிறக்கும் என்னலாம். அகத்திணையியலில்உள்ளுறைகருப்பொருள் பற்றி வரும் எனப் பொது இலக்கணம்கூறி உள்ளுறையுவமத்தின் இலக்கணமும் கூறினார் ஆசிரியர். பொருளியலில் இறைச்சியின் இலக்கணம் கூறினார். உள்ளுறையுவமமும் இறைச்சியும்குறிப்பாற் பொருள்கொள்ளவைத்தலின், அகன் ஐந்திணைக்கண்ணும் குறிப்பாற் பொருள்கொள்ளவைக்கும் வகைகள் எத்தனை எனப் பொருளியலிற் கூறுவார். உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு என ஐந்து என்றார். முன்னிரண்டு பற்றி விளக்கமாகநூற்பாக்கள் கூறிய ஆசிரியர் பின் மூன்று பற்றிக் கூறவில்லை. இவ்வகையில் அமைதி கூறுவதானால் நச்சினார்க்கினியர் கூறியதே பொருத்தமாம்.

இளம்பூரணர் கொள்கையைப் பார்ப்போமானால் அவர் இறைச்சி என்ற குறிப்புப் பொருளையேகொள்ளவில்லைஎனத் தெரியலாம். இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்றும் அதன் மூலமாகவும் குறிப்புப்பொருள்கொள்ளலாம் என்றும் கொண்டார் இவர் அப்படியானால் உள்ளுறையுவமம் முதலியனவும் கருப்பொரு

ளடியாகத்தானே பெறப்படுகின்றன என வினவின் அதற்கு விடையில்லை. ஒருவேளை, குறிப்புப்பொருள் தருமாறு அமைந்த கருப்பொருளே இறைச்சிஎனப்படும்; பிறகருப்பொருள் இறைச்சிஎன்ற பெயரால் கூறப்படா என்ற கருத்துடையவரோ இளம்பூரணர் என்ருல் அவ்வாறு கொள்வதற்கும் இடம்இல்லை. ஏன் என்ருல், ''இறைச்சியிற் பிறக்கும்'' என்ற நூற்பாலில் ''இறைச்சிப்பொருள் பிறிதும் ஓர் பொருள்கொளக் கிடப்பனவும் கிடவாதனவும் என இருவகைப்படும்'' என்று எழுதமாட்டாரே! ஆதலின் கருப்பொருளை இறைச்சிப்பொருள் என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறியதாக இளம்பூரணர் கொண்டார் என்பதற்கும் இடமில்லை. ஆதலின் எந்தவகையிலும் இவர் உரை பொருந்துவதாக இல்லை.

(தொடரும்)

---

செந்தமிழ் இதழ் பல அரிய செய்திகளைத் தாங்கி வருவதை தமிழுலகம் நன்கு அறியும். பல புதிய மாற்றங்களோடும் பொலிவோடும் செந்தமிழ் இதழ் மாற்றப்பட்டுள்ளது. ஆண்டுச் சந்தா ரூபாய் ஐந்தேதான். எனவே ஒவ்வொரு தமிழ்மகனின் கையிலும் அது திகழவேண்டுமன்ருே? ஒவ்வொருவரும் ஓரிரு நண்பர்களைச் செந்தமிழுக்குச் சந்தாதாரர் ஆக்கி உதவுங்கள். அது தமிழுக்குச் செய்த தொண்டு தமிழர்க்குச் செய்த தொண்டாகும்.

—பொறுப்பாசிரியர்

## வரவேற்பு

26-8-65 அன்று செந்தமிழ்க் கல்லூரி முதலாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடத்தப்பட்டது அதுபோது 4-ஆம் ஆண்டு மாணவர் செ.அ. முத்துக்கிருஷ்ணன் வரவேற்ற வாழ்த்துப் பா.

வளமார் மொழியைக் கற்றிட வந்த
இளமைச் செல்வர் என்றன் தோழர்
இன்பக் குயிலின் இனிய ஓசைகொள்
அன்புத் தங்கையர் அனைவரும் வருக!
பாட்டும் இசையும் பாட வேண்டும்
பாட்டிலை என்றால் பல்லிசை இல்லை.
மொழியும் நாடும் நமதுயிர் உடலாம்
மொழியுயிர் இன்றேல் நாடுடல் இல்லை.
நாட்டில் நம்மொழி நசுக்கு வோரை
வாட்டிட வந்தோர் வருக! வருக!
பழந்தமிழ்ப் பெருமை பேசிப் பேசி
இழந்தோம் புகழை இனிப்பய னில்லை.
எங்கும் தமிழ்மொழி ஏற்றம் பெறவே
இங்கே தமிழர் இனிதுற வேண்டும்
என்றே உணர்ந்தோர் என்னுடன் பிறந்தோர்
நன்று வருக! நலமுடன் வருக!
சாதிப் பூசல் சமயப் பூசல்
வீதிப் பூசல் வீட்டிலும் பூசல்
பூசல் கொண்டு பூமியி ழந்து
வாசலில் நிற்பவர் வழக்கு மன்றில்
தமிழச் சாதி தாழ்ந்து போக

உமிழ்ந்தார் பிறரும் உயர்விலை எனவே!
நாதி யற்றவர் நம்மவர் என்ற
சேதி தெரிந்தநீர் சிறப்பாய் வருக!
பெற்ற தாயை மகமறந் தாற்போல்
உற்ற தமிழை ஏன்மறந் தார்கள்?
தமிழால் வளர்ந்தோர் தான்எல் லோரும்
தமிழை வளர்ப்பவர் தரணியில் இல்லை
வளர்ந்த பிறகு வளர்த்த தமிழைத்
தளர்ந்த மனத்தால் தாம்மறந் தார்கள்.
பெருக வேண்டாம் இவர்கள் என்போர்
வருக! வருக! வணக்கம் உமக்கு.
தென்றல் வீசும் தெளிவில் வருக!
மன்றில் தமிழ்த்தாய் மகிழ்வுற வருக;
அன்னைக் குலமே அமைவுற வருக!
வண்ண மலரின் சிரிப்பாய் வருக!
மண்ணிற் பொறையுடை மாணவர் வருக!
வருக! வருக! வருக!
வருக! என்றே வரவேற் றேனே!

ப. இராமலிங்கம், 3-ஆம் ஆண்டு

தமிழ்:—

தமிழென்ற தாயென்னைத் தரணிக்க னுப்பித்
தமிழ்த்தாயின் புகழ்பாடி வாவென்று சொன்னாள்
தமிழ்தான்என் மூச்சாகும்! அதுவேஎன் பேச்சாம்!
தமிழென்ற தாய்தன்னை இதயத்தில் ஏற்றேன்!
தமிழேதான் எனையாட்சி செய்கின்றா ளின்று!
தாயென்ற தமிழ்கூறும் கவிதையினைப் பற்றி

அமிழ்தென்ற தமிழ்பாடி அவனிதனில் வாழ
ஆமின்று அவளடியைத் தொழுதெழுவேன் நானே!

**மாணவர்கள்:—**

பிறந்திட்டோம் தமிழ்மண்ணில்! நாமும் இந்நாள்
பிள்ளைநிலை மாறித்தான் இளைஞர் ஆனேம்!
மறவோமே தாய்தன்னை! நெஞ்சில் என்றும்
மாத்தமிழை அவ்வாறே எண்ணி நிற்போம்!
இறந்தாலும் தமிழ்படித்தே இறப்போ மென்றே
எடுத்திடுவோம் இந்நாளில் உறுதி தன்னை!
துறந்தார்க்கும் சிறந்தார்க்கும் பெருமை சொல்லும்
தூயதமிழ்க் குறள்மீது ஆணை செய்வோம்

வாழ்வினையே எண்ணிடுவோர் இங்கே இல்லை!
வளமுற்ற தமிழுக்கே வாழ்வை யீந்தோம்.
சூளுரைத்துச் செந்தமிழைப் பயில வந்தோர்
சூட்டுகின்றேம் பாமாலை ஏற்றுக் கொள்வீர்
வாழ்வோடு தமிழைச்சேர்த் திட்ட நாங்கள்
வருகவென வாழ்த்துகிறேம் வருக வாழ்க!
தாழ்கின்ற தமிழ்நிலையைக் கண்டஞ் சாதீர்
தமிழ்கற்க வாருங்கள் வருக வாழ்க!

இரா. சாமி, நான்காம்யாண்டு.

"இந்தாப்பா வரவேற்புக் கவிபா டே"ன்றே
எனைப்பணித்தார்; என்செய்வேன் உணர்ச்சி என்னை
உந்தப்பாப் பாடுதற்கு முயற்றி செய்தேன்.
உண்மையிலே மனங்குழம்பிப் பணித்தோர் சொன்ன
அந்தப்பா பாடுதற்கே ஆசை கொண்டே

அகவற்பா, வஞ்சிப்பா, கலிப்பா' வெண்பா,
சந்தப்பா இவைகளிலே எப்பா யாப்பேன்
சஞ்சலந்தான் அப்பப்பா! என்செய் வேன்நான்!

முதன்மைமிகு புலவர்பலர் பாடஞ் சொல்ல!
முத்தமிழில் பற்றுடனே இங்கு வந்த
முதலாண்டுத் தோழர்காள்! தோழி யர்காள்!
முன்வந்தீர் தமிழ்கற்கப் பாராட் டுக்கள்!
இதமான தமிழ்மொழியின் வளர்ச்சிக் காக
என்றென்றும் உழைப்பதற்கு வருக! வாழ்க!
பதம்பெயர்த்து வந்துள்ளீர்! வருக! வாழ்க!
பாங்குடனே என்றென்றும் புகழில் வாழ்க!

அருள்விளக்காம் போதிமரப் புத்தன் சொல்லும்,
அறிவொளியாம் வள்ளுவனார் குறளும், உள்ள
மருள்நீக்கும் வேதத்தின் சாரங் காட்டும்
மாமேதை பலர்கூறும் கனிந்த சொல்லும்,
உருள்கின்ற உலகிற்குச் சகாநான் என்றே
உபநிடதம் பற்பலவும் நவிலும் கூற்றும்,
இருள்நீக்கி எழுந்தோடி வாழ்விற் கொண்டே
இனியதமிழ் காத்திடுவீர்! வருக நன்றி!

---

**செந்தமிழ் இதழுக்கு மொழி, வரலாறு, அறிவியல், திறனய்வு, கல்வெட்டு, ஆராய்ச்சி, இலக்கியம் என ஆக்கப் பூர்வமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன கட்டுரை எழுதுவோர் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.**

—பொறுப்பாசிரியர்

**சீ. கோமளவல்லி, இறுதிநிலை.**

சங்கச் செய்யுளும் சகம்புகழ் காப்பியமும்
இங்கு நீவிர் இன்புறப் பயில்வீர்
வான்புகழ் வள்ளுவர் வாய்மறை தாமும்
தேனென இனிகச் செவிவழிக் கற்பீர்
ஒல்காப் புகழ்பெறு தொல்காப் பியமும்
பல்கால் கற்றுப் பயன்பல பெறுவீர்
நாட்டு வரலாறு நாமறியாக் குன்றும்
கேட்டுத் தெரிவீர் கிளிமொழி மங்கையீர்
பாட் டுகள் எழுதும் பான்மையும்
நாட்ட அறிவீர் நலமுற வருகவே.

இவ்வரவேற்புக் கூட்டம் கல்லூரித் துணைத் தாளாளர் திரு சுந்தரவரதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் திரு.கி.பழநியப்பன் அவர்கள் மாணவர்களின் கடமையை வலியுறுத்திப் பேசினார்கள். கல்லூரி முதல்வர் வரவேற்க முதலாண்டு மாணவர்கள் பதிலுரை நவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

# வள்ளலார் வளர்த்த தமிழ்

புலவர்
தி. நா. அறிவுஒளி

தன்னேரில்லாத தமிழ் மொழி ஒவ்வொரு நூற்றூண்டிலும் தனக்குரிய சீர்மைசால் வளர்ச்சியில் பிழைபடாது உயர்ந்தோங்கி வளர்ந்து வந்திருப்பதை இலக்கிய ஆர்வலர் நன்கறிவர்.

ஐரோப்பிய இலக்கியங்களின் அறிவு தமிழகத்தில் பரவிய காலத்தில் சிலர் அம்மொழிகளின் செல்வாக்கில் மூழ்கித் திளைத்து திசை தவறிக் கிடந்த சூழலில் தமிழின் சீர்காக்கவும், அதன் வளம் பேணவும் முன் வந்தோர் சிலர் உளர். இவர்களுள் வடலூர் அடிகள் இராமலிங்க வள்ளல் முதன்மையானவராவார்.

தமிழ்நாட்டின் முதல் புரட்சிக் கவிஞர் வடலூராரே! சீர்திருத்தப் புலவராகவும், மன்பதை மறுமலர்ச்சி முன்னோடியாகவும், பண்டைத் தமிழறப் பண்பினை மீண்டும் கண்டுபிடித் துணர்த்திய கண்டுபிடிப்பாளராகவும் கடந்த இருநூற்றூண்டுகளுள் இராமலிங்க அடிகள் ஈடிணையின்றித் திகழ்கின்றூர்.

தென்னூர்க்காடு மாவட்டத்தில் தில்லைக்கு வடமேற்கிலுள்ள மருதூரில் இராமையாவுக்கும் சின்னம்மையாருக்கும் 5-10-1823 (சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21 ஆம் நாள்) ஞாயிற்றுக் கிழமை பூர்வபட்சம் துவிதியை சித்திரை நட்சத்திரம் நாலாம் பாதம் உதயாதி 29 தெக்கு)

இராமலிங்கர் தோன்றினர்.

படிப்பில் அவர் நாட்டம் கொண்டு பயின்றதாக அறியவியலவில்லை. ஆயின் தாமே தமிழை விருப்பத்தோடு ஐய மறக் கற்றுணர்ந்தனர். கருவிலே திருவுடைய இவர் யாப்பறிவும் நிரம்பப் பெற்றவராக இருந்தார். சமயப் பேரறிவும் மிக்கிருந்த அடிகள் புத்துலகை நோக்கி புணரும் ஆன்ற ஆற்றலும் சான்றவராக விளங்கினர். இவர் துணைவியார் தனக்கோடி அம்மையார் ஆவார். இவர் மண வாழ்வில் ஈடுபடவே இல்லை. மதிக்கத்தக்க சான்றாண்மைத் திருவாட்டியாரான தனக்கோடியம்மையார் சிவவழிபாட்டிலே திளைத்துக் கணவர் கருத்திற்கேற்பத் தனிவாழ்வில் ஈடுபட்டு ஒப்பற்ற பெண்பாற் துறவியராக விளங்கினர். தனக்கோடியம்மையாரின் தன்னலமில்லாத அருளுணர்வு வியக்கத்தக்கதாக இருந்தது இன்றைய மகளிர்க்கொரு கலங்கரை விளக்கமாகக் கற்பொளி வீசித் திகழும் தனக்கோடியம்மையார் தமிழ்நாட்டுத் தவச் சொல்வியருள் ஒருவராவார்.

அடிகளார் சமயப் பொதுமைச் சுடரறிவு கொளுத்தினர். 'எம்மதமும் சம்மதமே' என்றார். 'அருட்பெருஞ் சுடரே தனிப்பெரும் அருளே' என்ற கொள்கை முழங்கினர். ஐம்பதாண்டுகளும் ஐந்து திங்களும் அடிகளார் வாழ்ந்தார். அரை நூற்றாண்டு வாழ்வில் ஐந்து நூற்றாண்டுகளில் செய்யத்தக்க இலக்கிய-சமய-சீர்திருத்த உலகத் தொண்டுகளைத் தனியொருவராகவே ஆற்றினர் இராமலிங்கர். வியக்கத்தக்க இவ்வுண்மையைத் தமிழர்கள் இன்னும் உலகறிய உணர்தவில்லை! என்னே தமிழன் பெருமை!

இராமலிங்க அடிகளார் 1867-ம் ஆண்டு திருவருட்பாவை முதன் முதலாக வெளியிட்டருளினர். பின் 1874-ம்

ஆண்டு தைத்திங்கள் 19-ஆம் நாள் (புனர்பூசமும் பூசமும் கூடிய நாளில்) வெள்ளிக்கிழமை இரவு பதினைந்து நாழிகைக்குமேல் மறைந்தார்.

வள்ளலார் வாழ்வுக்காலம் மிகக் குறைந்ததுதான். அக்குறுகியகாலத்தில் மிகப்பெருந் தொண்டாற்றியிருக்கிறாரென்றால் அவர் எவ்வளவு பேராற்றலோடும் பேரறிவோடும் உழைத்தியங்கியிருப்பார் என்பதை நாம் எண்ண வேண்டும்.

அடிகளின் உரைநடைத் தொண்டு குறிப்பிடத்தக்கதொரு தொண்டாகும். 1. சீவகாருணிய ஒழுக்கம். 2. மனுமுறைகண்ட வாசகம். 3. ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி 4. தொண்டமண்டல சதகம். 5. தமிழ். 6. உண்மைநெறி ஆகிய உரைநடை ஆக்கங்கள் அடிகளார் ஆக்கியவை. இவர் நடை வடசொற் கலப்புமிக்க நடையே. அது அக்காலச் சூழ்நிலையால் நேர்ந்ததாம். இவர் ஆய்வுகளுள் சில முடிவுகள் தற்கால வளர்ந்த ஆய்வுநிலையில்பிழைபட்டவையாகவே உள்ளன. ஆயினும் இவர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தால் ஒப்பற்ற உரைநடையாசிரியாராகத் திகழ்ந்திருப்பார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை!

"பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றிஎரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றது தான் சீவகாருணியம். பசியென்கிற விசக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில், ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம்" (சீவகாருணிய ஒழுக்கம்)

"குருடும் செவிடும் ஊமையும்முடமுமாகவிருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்தவழியாற் கிடைக்கும்? பசி எப்படி நீங்

கும்? என்று தனித்தனி நினைத்துநினைத்து துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சிவகாருணியம்.''

''பசியினல் வருந்துகின்றவர்கள் எந்தத்தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம் சமயவொழுக்கம் சாதியொழுக்கம் செய்கையொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச்சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவிர்த்தி செய்விப்பதே சீவகாருணியம். சன்மார்க்கவொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவிர்த்திசெய்து கொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவிர்த்திசெய்விப்பதே சிவகாருணியம்'' (ஷை 1924 பதிப்பு.)

இந்தக் கருத்துக்கள் எத்துணை பேரருள் நெஞ்சிலிருந்து பெருகியிருக்கும்! எந்தப் பொதுவுடைமைக்காரனையும் வெல்லும் பொதுவுடைமைக் கொள்கைமுழக்கமல்லவா இது!

மேலும் உயிரிரக்கக் கொள்கை எவ்வாறு மக்களால் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்பதை விளக்குகிறார்:

''சமுசாரிகள் விவாக முதலிய விசேட காரியங்களில் பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறுவேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல், பாடல், வரிசை, ஊர்வலம்முதலிய விநோதங்களையும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முத

விய பெருமைப்பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பில் அழுந்தியிருக்கும் தருணத்தில் பசித்த ஏழைகள் முகத்தைப்பார்க்கவும் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷகாலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது, அப்போது அவ்வளவு சந்தோசத்தையும் இழந்து துக்கப்படுகிறார்கள். இப்படித் துக்கப்படும்போது அலங்காரம்செய்த பந்தலும், சங்கல்ப விகற்பமான சடங்குகளும், ஆடல் பாடல் வாத்தியம் வரிசை ஊர்க்கோலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத் தடைசெய்யக்கண்டதில்லை அந்தச் சுபகாரியத்தில் உள்ளபடியே பசித்த சீவர்களுக்கு ஆகாரம் கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின்பத்தையும்வெளிப் படச்செய்திருந்தார்களேயானால், அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தைநீக்கி விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா?''

'பசியொழிப்பே இந்நாட்டில் முதல் நோக்கம்' என்ற உண்மையை அன்றேநன்குணர்ந்து உணர்த்திய சான்றோர் வடலூராரின் முன்னறிவித் திறன் வியக்கத்தக்கதல்லவா? நம்நாடு விடுதலைபெற்றாலும் பசியடிமையிலிருந்து விடுதலை பெறவேண்டியதே மிக இன்றியமையாதது என அடிகளார் அன்றே தெளிவாக அறிவுறுத்தியமை கருதற்குரியது.

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச் சங்கம்

## பாண்டியன் நூலகம்

## புத்தகப் பட்டியல்

வரலாறு:

| | | |
|---|---|---|
| 36. | வேளிர் வரலாறு | மு. ராகவஐயங்கார் |
| 37. | சுந்தரமூர்த்திசுவாமியும் கொங்குநாடும் | சி. எம். இராமச்சந்திரசெட்டியார் |
| 38. | அப்பர் சுவாமிகள் சரித்திரம் | கா. சுப்பிரமணிய பிள்ளை |
| 39. | சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம் | ,, |
| 40. | சேரன் செங்குட்டுவன் | மு. இராகவஐயங்கார் |
| 41. | தித்தன் | இரா. இராகவஐயங்கார் |
| 42. | ஒட்டக்கூத்தர் சரித்திரம் | சி. கு. நாராயணசாமி முதலியார் |
| 43. | திருச்சிறுப்பள்ளி-கல்வெட்டு | ஆதிநாதன் |
| 44. | சர். தாமஸ்மன்றோ | எ. இராமநாதஐயர் |
| 45. | ஆழ்வார்கள் காலநிலை முதற்பகுதி | மு. இராகவ ஐயங்கார் |
| 46. | ,, | ,, |
| 47. | அகத்திய முனிவர் | சகவீரபாண்டியனார் |

| | | |
|---|---|---|
| 48. | தாயுமானவர் வரலாறும் நூல் ஆராய்ச்சியும் | கா. சுப்பிரமணியபிள்ளை |
| 49. | வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி | நா. மு. வேங்கடசாமி நாட்டார் |
| 50. | நெப்போலியன் வரலாறு | கிருஷ்ணசாமி சர்மா |
| 51. | நமது பரதகண்டம் இரண்டாம் பாகம் | வை. சூரியநாராயண சாஸ்திரி |
| 52. | நமது பரத கண்டம் முதல் பாகம் | ,, |
| 53. | சத்திய சோதனை 2-ம் புத்தகம் | மகாத்மா காந்தி |
| 54. | தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரகம் முதல் பாகம் | ,, |
| 55, | அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார் | ஆர். கிருஷ்ணமாச்சாரி |
| 56. | தமிழ்ப் புலவர் வரலாறு 1, 2ம் பகுதி | நா. கனகராச ஐயர் |
| 57. | அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி | பொ. செகந்நாதன் |
| 58. | இலங்கைச் சரித்திரம் | F. X. C. நடராசா |
| 59. | ,, | ,, |
| 60. | பன்னிரு புலவர் சரித்திரம் | வி. கிருஷ்ணமாச்சாரி |
| 61. | வில்சனின் கதை | டேவிட் லோத் |
| 62. | ஆறுமுகநாவலர் சரித்திரம் | அருணுசலக் கவிராயர் |
| 63. | விவேகானந்த சுவாமிகள் திவ்ய சரித்திரம் | எஸ். வி. வரதராச ஐயங்கார் |
| 64. | தட்சிண இந்தியா சரித்திரம் 2-ம் பாகம் | பகடால நரசிம்மலு நாயுடு |
| 65. | இந்திய சரித்திரம் | கெ. ஏ. வீரராகவாச்சார்யா பி. ஏ. |
| 66. | சந்திரகுப்த சரித்திரம் | வி. பாலம்மாள் |
| 67. | மணிவாசகர் | பி. எஸ். ஆச்சாரியார் |

| | | |
|---|---|---|
| 68. | முதல் குலோத்துங்க சோழன் | டி. வி. சதாசிவபண்டாரத்தார் |
| 69. | பட்டினத்தடிகள் வரலாறும் ஆராய்ச்சியும் | கா. சுப்பிரமணியபிள்ளை எம்.ஏ.,எம்.எல். |
| 70. | ,, | ,, |
| 71. | இரண்டாம் குலோத்துங்கன் | மா. இராசமாணிக்கம் |

சமயம்:

| | | |
|---|---|---|
| 1. | மகா பாரத வசனம் | நல்லாப்பிள்ளை |
| 2. | ,, | ,, |
| 3. | ,, | ,, |
| 4. | ,, | ,, |
| 5. | ,, | ,, |
| 6. | ,, | ,, |
| 7. | ,, | ,, |
| 8. | ,, | ,, |
| 9. | கந்தபுராண வசனம் | கச்சியப்பசிவாசாரியார் |
| 10. | ,, | ,, |
| 11. | மகாபக்த விஜயம் | மொ. பெ. நாராயணதாஸ் |
| 12. | ,, | ,, |
| 13. | மகாபக்த விஜயம் | சீனிவாசயங்கார் |
| 14. | கம்ப ராமாயண வசனம் | திருச்சிற்றம்பல தேசிகர் |

| | | |
|---|---|---|
| 15. | பாகவத புராணம் | வேதவியாச மகாமுனிவர் |
| 16 | ,, | ,, |
| 17. | மகாபார்த விராட பர்வம் | — |
| 18. | திருவருட்பாத்திருமுறை | இராமலிங்க சுவாமிகள் |
| 19. | ஆதிபாண்டுரங்க பக்த விஜயம் | எம். ஆதிகேசவன் |
| 20. | கந்தபுராண மூலமும் உரையும் | கச்சியப்பசிவாசாரி |
| 21. | விஷ்ணு புராணம் | சுப்பராய ஐயர் |
| 22. | பகவத்கீதை | வெ. குப்புசாமி ஐயர் |
| 23. | ,, | ,, |
| 24. | பகவத்கீதை | மணி. திருவேங்கடசுவாமி |
| 25. | பகவத்கீதை உரையுடன் | வீரசுப்பய்யசுவாமிகள் |
| 26. | பகவத்கீதை வசனம் | டி. சி. பார்த்தசாரதி |
| 27. | பகவத்கீதை | சி. ஆர். சீனிவாசயங்கார் |
| 28. | ,, | பரமஹம்ச சச்சிதானந்தர் |
| 29. | ,, | சி. சுப்பிரமணிய பாரதி |
| 30. | திருவாய் மொழி | டி. ஆர். புருஷோத்தம நாயுடு |
| 31. | ,, | ,, |
| 32. | ,, | ,, |
| 33. | ,, | ,, |